**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.46
https://ngmtamil.in/

# தமிழ் இலக்கியங்கள் காட்டும் தமிழரின் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் அ. மதலேன்,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர் – 1

madeline8101976@gmail.com, 9629836995, https://orcid.org/0000-0003-4521-5606

**Dr. A. Madeline**,

Assistant Professor, Department of Tamil, St. Joseph's College of Arts and Science (Autonomous), Cuddalore - 1. madeline8101976@gmail.com, 9629836995

https://orcid.org/0000-0003-4521-5606

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டையத் தமிழர்களின் வாழ்வியல் அறநெறி வாழ்வியலாக அமைந்;திருக்கிறது. தமிழன் வாழ்ந்த நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரித்து ஐந்திணை வாழ்வியலை இயற்கையோடு இயைந்து வாழ்ந்திருக்கிறார்கள். தமிழர்களின் பண்பாட்டில் மணிமகுடமாக விருந்தோம்பல் திகழ்கிறது. தமிழன் புறவாழ்க்கையை வீரத்தையும் மானத்தையும் அடிப்படையாக கொண்டு வாழ்திருக்கிறான். இல்வாழ்க்கையின் காதல் உணர்வை சங்கஇலக்கியங்கள் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுகின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் தமிழனின் உயர்ந்த வாழ்வியல் நெறியை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக திகழ்கிறது.

**திறவுச் சொற்கள்**

வாழ்வியல், கோட்பாடு, அறநெறி, விருந்தோம்பல், குறிக்கோள்

**முன்னுரை**

பழந்தமிழர் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் நெறிகள் என்றும் உலகம் வியக்கக்கூடிய போற்றக்கூடிய வாழ்வியல் நெறியாகவே இருந்திருக்கிறது. தன்னலமின்றி பிறர்நலம் பேணும் உயர்ந்த வாழ்வியல்நெறி நம் பழந்தமிழருடையதாக இருந்திருக்கிறது. பழந்தமிழன் பண்பாட்டு வாழ்வியல் அறநெறியை படம்பிடித்துக் காட்டுகிறது. மானமும் வீரமும் கொண்ட மறவுணர்வு மிக்க பழந்ததமிழ் அரசர்கள் போர் நெறியை வரையறை செய்து போர் புரிந்திருக்கிறார்கள். விருந்தோம்பலை இல்லறத்தின் உயர்ந்த பண்பாகக் கொண்டிருந்தனர் தமிழர்கள். அனைவரையும் தம் உறவுகளாக இணைத்து வாழ்வியல் கோட்பாடுகளையும,; நெறிகளையும் உணர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள். உண்டி கொடுத்தவர்களை உயிர்கொடுத்தவர்களாக மதித்திருக்கின்றனர்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பழந்தமிழர்களுள் ஆண்கள் வினையே உயிராகவும், பெண்கள் தங்கள் கணவரையே உயிராகவும் கொண்டிருந்தனர். சோம்பியிருத்தல் தகாது என்ற செம்மையான நெறியுடன் வாழ்ந்திருக்கிறார்கள். உயர்ந்த குறிக்கோள்;கள் மனித வாழ்க்கையின் இலக்கு என்ற சிந்தனையுடன் வாழ்ந்திருக்கிறார்கள் நம் பழந்தமிழர்கள். தங்கள் வாழ்க்கையை அறநெறியின் அடிப்படையில் வாழ்ந்திருக்கிறார்கள். இந்த வாழ்வியல் நெறிகள் தமிழ் இலக்கியங்களில் சுட்டபட்டிருக்கும் நிலையை ஆராய்கிறது இவ்வாய்வுக் கட்டுரை.

**பிறர்நலம் பேணும் உயர்ந்த நெறி**

இவ்வுலகம் இன்றும் நிலைபெற்;றிருக்க காரணம் தன்னலமின்றி பிறர்நலம் பேணும் நெறியுடையவர்கள் இருப்பதால்தான் என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் அரசப் புலவர் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் பாடி வைத்திருக்கிறார்.

“உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர்அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்குஎன முயலா நோன் தாள்
பிறர்க்குஎன முயலுநர் உண்மை யானே”

(புறநானூறு 182)

கிடைத்ததைப் பலருக்குப் பகிர்ந்து உண்ணக்கொடுத்து வாழ வேண்டும். சோம்பல் கூடாது, எவரையும் வெறுக்கக் கூடாது, சான்றோர் அஞ்சும் அறஞ்சாராச் செயல்களைச் செய்யக்கூடாது. நாளும் நல்ல செயல்களையே நாடிச் செய்ய வேண்டும். எவ்வளவுதான் இலாபம் கிடைப்பதாயினும் பழிச்செயல்களைச் செய்யக்கூடாது. அத்தகைய மன உறுதி வந்தமைதல் வேண்டும். தன்னலம் பாராமல் பிறர் நலம் பேணும் பெற்றியராகத் துலங்க வேண்டும் என்று பிறர் நலம் பேணும் உயர்ந்த நெறியை குறிப்பிடுகிறது புறநானூறு.

**தமிழரின் அறநெறி**

தமிழரின் பண்பாட்டு வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டும் புறநானூறு என்னும் சங்க இலக்கியம் பழந்தமிழரின் அறவாழ்வை மிகநுட்பமாக படம்பிடித்துக்காட்டுகிறது. ஆய் அண்டிரன் என்னும் வள்ளலின் பண்பை,

“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கைவண்; மையே”

(புறநானூறு 134)

என்ற புறநானூற்றுப்பாடல் அவனின் அறமாண்பை பதிவுசெய்து தந்திருக்கிறது. இப்பிறப்பில் செய்யும் அறச்செயல்கள், மறுபிறப்பில் பயனளிக்கும் என்று கருதி, அறம் செய்வதை ஆய் ஒரு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

விலைபொருளாகக் கருதுபவன் அல்லன். சான்றோர்கள் சென்ற நெறிகளின் படி மறுபிறவியின் பயனை எதிர்பாக்காமல் அறம் செய்தான் என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுகிறார்.

வழிப்போக்கர்களுக்கு அவர்களின் தாகத்தை தணிக்க குடிநீருடன் நெல்லிக்காய் வழங்குவது அறம் என்பதாக பின்வரும் குறுந்தொகை பாடல் பேசுகிறது.

"அறந்தலைப் பட்ட நெல்லியும் பசுங்காய்"

(குறுந்தொகை 209)

சான்றோர் சொல்லும் செயலும் அறம் என்பதாக குறுந்தொகைப் பாடல் காட்டுகிறது.

"திறவோர் செய்வளை அறம்"

(குறுந்தொகை 247)

அறத்தால் புகழ்பெற விரும்புவோர் பொருளைச் சேமித்து வையாமல் ஈவார் என்பதை,

"பெருநன் றாற்றிற் பேணாரு முளரோ"

(குறுந்தொகை 115)

அறம் என்பது மனிதர்களின் வாழ்க்கையையும் அவர்தம் வரலாற்றையும் இறைவன் படைத்த படைப்புகளையும் ஆட்சிசெய்யும் முழுமுதலான நெறியாகும் என்பதை,

"அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"

(குறள் 37)

என வள்ளுவர் சுட்டுகிறார்.

பண்டையத் தமிழர்கள் வணிகத்தில் நேர்மையை முதன்மைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். இதனைச் சங்க இலக்கியமான பட்டிணப்பாலை, "கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறை கெடாது" என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறது. அதாவது, ஒரு பொருளை வாங்கும்போது அதிகமாக வாங்காமலும், பிறருக்கு விற்கும்போது அளவில் குறைத்துக் கொடுக்காமலும் சமநிலைபேணி அறநெறியுடன் வணிகம் செய்தனர்.

தமிழரின் போர்நெறி

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றிய மூத்த குடி"

(பு.வெ.மா)

மானமும் வீரமும் கொண்டு போரிட்ட அரசர்கள் போர் அறங்களை போற்றி மகிழ்ந்தனர். மறவுணர்வு மிக்கோராயினும் அறத்தையே போற்றி நின்றனர். அரசர்கள் பகைவர்களிடமிருந்து தன்நாட்டைக் காக்கவும், தன்மானம் காக்கவும், தன்னைப்பற்றி பேசிய இழிவு வார்த்தைகளை உடைத்தெறியவும், தன்மக்களைக் காக்கவும் போர்புரிந்து தங்கள் வீரத்தை நிலைநாட்டினர். வாழ்வியல் நெறிகளை வகுத்தளித்த தமிழன், வாழ்விடத்தையும் முறைப்படுத்தினான்;;;. பண்டைய தமிழன் தனித்தனி கூட்டங்களாக வாழ ஆரம்பித்துப் பிறகு தங்கள் கூட்டத்தைப் பாதுகாக்க எதிரியை வீழ்த்த போரியலை வகுத்தான். அதிலும் நீதி, கொள்கை என நேர்மையைக் கடைபிடித்தே போர்முனையை நெறிபடுத்தினான்.

ஆவினம் கவர்தல், வெட்சி புனைதல், ஆநிரை மீட்டல் என இலக்கியப் பெருமைகொண்ட போர்முறை தமிழினத்துக்கு மட்டுமே உரியது. நீதி தவறாத ஆட்சி செய்யும் மன்னன் எதிரியுடன் நடக்கும் போரிலும்;; நீதியைக் கடைப்பிடித்தான். பெண்கள், குழந்தைகள் முதியோர், முடியாதோர், ஆவினம் தவிர்த்தே அறநெறி போர்முறை பண்டையத் தமிழனால் இந்த உலகிற்கு உணர்த்தப்பட்டது.

"ஆவும் ஆணியற் பார்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறா அதீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும் அறண் சேர்மின்"

என்று படையெடுக்குமுன் பகைநாட்டில் பறையறைந்து தன் படையெடுப்பை அறிவித்த பின்னரே போர் தொடுத்தனர்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதான யாரும் கூறமுடியாத வாழ்வியற் கோட்பாட்டை கணியன் பூங்குன்றனார் என்னும் அறிஞர் பெருமகன் தன் பாடல் ஒன்றில் குறி;ப்பிட்டிருக்கிறார். மேலும் வாழ்தல் வேண்டிப் பொய் கூறோன், மெய் கூறுவல் என்பது நம் முன்னோர்கள் கண்ட வாழ்வியல் நெறியாகும்.

இதனை,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொழுது இரங்கும் மல்லர்பேர் யாற்று
நீர்வழிப் படுஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படுஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

என்ற புறநானூற்றுப் பாடலில் கணியன் பூங்குன்றனார் வகுத்துக் காட்டிவிடுகிறார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதுதான் சங்ககால மக்களின் எண்ணமாக திகழ்ந்தது அரசுகளுக்குள் போர்கள் ஏற்படினும் மக்களுக்குள் தாங்கள் பிறிதொருவர் என்ற எண்ணம் இருந்ததில்;லை. சோழநாட்டு மன்னனை கோப்பெருஞ்சோழன் மீது பாண்டிய நாட்டு புலவரான பிசிராந்தையார் நட்பு கொண்டது இந்த எண்ணத்தினாலேயே, அதனால்தான் எந்த நாட்டு மக்களும் எந்தநாட்டு அரசனிடமும் சென்று ஈகைபெற முடியாது. நிலம், அரசு என வேற்றுமை பலவாறு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இருந்தாலும் மக்களிடையே ஒற்றுமை நிலவி வந்தது. நம் நாட்டு மக்களுக்கு பிரச்சனை ஏற்பட்டாலொழிய மன்னர்களும் போர் முதலானவற்றை மேற்கொண்டதில்லை என்பதை சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

**விருந்தோம்பல் நெறி**

விருந்தோம்பல், இல்லறத்தின் தலையாய கடமையாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாது வரவேற்று உபசரிப்பது தமிழர்களின் உயரிய பண்பாகும். இதனை,

“அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே”

(நற்றிணை 142: 9-11)

என்று நற்றிணை பாராட்டுகிறது. அமிழ்தமே கிடைத்தாலும் தாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கும் வழங்கி மகிழ்வர். ஏதுமில்லா நிலையில் விதைத் தினையை உரலில் இட்டு, இடித்து, உணவளித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறநானூறு – 333). விருந்தினருக்கு உணவளிக்க, வரகினைக் கடனாகப் பெற்று வருவதை ஒரு சங்கபாடல் காட்டுகிறது (புறநானூறு 327).

உணவிடுதற்காக ஒருவன் தன் வீரவாளையும் ஈடுவைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது (புறநானூறு 316). விருந்தினரின் தொடர்ச்சியான வருகையாலும் அவர்களுக்கு விருந்தோம்புவதாலும் ஒரு தலைவிக்கு ஊடல் கொள்ள நேரமில்லாமல் போனதாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (நற்றிணை 380). விருந்தோம்பல் கைகூடாத வாழ்க்கையை

‘விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை’

(புறநானூறு 266)

எனப் பெருங்குன்றூர்க் கிழார் கூறுகிறார். தமிழர்களின் வீட்டு வாசலில் அமைக்கப்பட்ட திண்ணை, அவர்தம் விருந்தோம்பல் பண்புக்குச் சிறந்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்**

வள்ளுவர் பகிர்ந்து உண்பது எல்லாவற்றிற்கும் தலையான அறம் என்கிறார். பழங்காலத்தில் உண்டி கொடுத்தவர்களை உயிர் கொடுத்தவர்களாக மதித்தனர் என்பதனை,

“ நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே”

(புறநானூறு 18: 18-21)

என்று குறிப்பிடுகின்றது புறநானூற்றுப் பாடல் ஒன்று

**வினையே ஆடவர்க்கு உயிரே**

பழந்தமிழர்களுள் ஆண்கள் கடமையே கொண்ட தொழிலே உயிராகக் கொண்டிருந்தனர். ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்கள் தத்தம் கனவரையே உயிராகக் கொண்டிருந்தனர். இதனை,

"வினையே ஆடவர்க்கு உயிரே வான்நுதல்
மனையுறை மகளிர்க்கு அவ்வாடவர் உயிர்"
(குறுந்தொகை 135:1-2)

என்று குறுந்தொகை குறிப்பிடுகிறது.

**சோம்பியிருத்தல் தகாது**

புகழும், இன்பமும், அறமும் ஆகிய இம்மூன்றும் சோம்பல் உடையாரிடம் தவறிக்கூட உண்டாவதில்லை என்று நம் முன்னோர் கண்டனர். இதனை,

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்;
அசைவுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இனம்மென
வினைவயின் பிரிந்து வேறுபடு கொள்கை"
(நற்றிணை 214:1-3)

என்று நற்றிணை நவில்கின்றது. எனவே வாழ்வியல் நெறிகளைச் செம்மையாக வைத்துக் கொள்வோர் சோம்பியிருத்தல் தகாது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**உயர்ந்த குறிக்கோள்**

நம் வாழ்க்கையின் குறிக்கோள் பிறருக்கு உதவுதாகவே அமையவேண்டும். இதுதான் சான்றோர் பண்டு கண்ட நெறி. அவ்வாறு ஒருவேளை உதவ முடியாமற் போனாலும் பிறருக்குத் தீங்காவது செய்யாமல் இருத்தலே சிறப்பாகும்.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லோரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியும் ஆர் அதுவே"
(புறநானூறு 195:6-9)

என்று நரிவெரூத்தலையார் என்னும் சங்கச் சான்றோர் புறநானூற்றில் குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்கள் இருக்க வேண்டும். அவ்வாறு உயர்ந்த குறிக்கோள்களை அடையப் பாடுபடும் பொழுது அவ்வுயர்ந்த குறிக்கோள்களை அடைய முடியாமல் போனாலும் கவலையில்லை என்பதனை முயல் வேட்டையாடி மனம் முறிந்து போவதைவிட யானை வேட்டையாடித் தோற்றுப்போவது மேல் என்கிறது வள்ளுவம்.

"கன முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது"
(திருக்குறள்: படைச்செருக்கு -1)

உயர்ந்த குறிக்கோள்கள் மனித வாழ்க்கையின் இலக்காக அமைய வேண்டும். அப்பொழுதுதான் சில அரிய செயல்களை நமக்காகவும் சமுதாயத்திற்காகவும் ஆற்ற முடியும் என்பதை உணர்த்துகிறது.

**முடிவுரை**

காலந்தோறும் அறவாழ்வை மேற்கொண்ட இனமாக தமிழச்சமுதாயம் இருந்திருக்கிறதை இலக்கியங்கள் சுட்டிகாட்டுகின்றன. பழந்தமிழரின் உயர்ந்த இந்த நெறிகள், உணர்வுகள், வாழ்வியல் இன்றுவரை நம்முடன் தொடந்து இருப்பதால் தமிழன் என்றும் உயர்ந்து நிற்கிறான்.

**துணைநூற் பட்டியல்**

[1.] வாழ்வியல் நெறிகள், சி.பாலசுப்பிரமணியன், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை.

[2.] பண்டைத் தமிழர் போர்நெறி, புலவர். கா.கோவிந்தன், தமிழ்த்தாய் பதிப்பகம், சென்னை.

[3.] புறப்;பொருள் வெண்பாமாலை, புலியூர்க் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.

[4.] திருக்குறள், பரிமேலழகர் உரை, சாராதா பதிப்பகம், சென்னை.

[5.] புறநானூறு, சங்க இலக்கியங்கள், பேராசிரியர் புலவர் அ.மாணிக்கம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

[6.] குறுந்தொகை, சங்க இலக்கியங்கள், முனைவர். இரா. பிரேமா, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

[7.] நற்றிணை, சங்க இலக்கியங்கள், புலவர் நா.இராமையா பிள்ளை, வர்த்தமானன், சென்னை.